
07.11.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### 30 விநாடிக்குள் தேங்காயை பல்லால் உரித்த லாரி ஓட்டுநர்



போச்சம்பள்ளி அருகே 30 விநாடிக்குள் தேங்காயை லாரி ஓட்டுநர் பல்லால் உரித்து சாதனை படைத்தார்.

போச்சம்பள்ளி அருகே உள்ள சாராக்கானூரைச் சேர்ந்தவர் பிரகாஷ் (28). இவர் கடந்த 5 வருடங்களுக்கு முன்பு குடும்ப வறுமை காரணமாக கல்லாரிப் படிப்பை இடையில் நிறுத்திவிட்டு தேங்காய் வெட்டும் தொழில் செய்து வந்தார்.

பின்னர், லாரி ஓட்டுநரான பிரகாஷ், நீண்ட நாள்களாக ஒரு நிமிடத்தில் பல்லால் தேங்காயை உரித்து சாதனை நிகழ்த்தி வந்தார். இந்த நிலையில், 30 விநாடிக்குள் பல்லால் தேங்காயை உரித்து தனது முயற்சியை வென்றுள்ளார். லிம்கா புத்தகத்தில் தனது சாதனை இடம் பெற முயற்சி மேற்கொள்வதாக அவர் தெரிவித்தார்.

## நோய் தாக்குதலை கண்டறிய விதை பரிசோதனை அவசியம்'



விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்யும் பயிர் விதைகள் நோய் தாக்குதலுக்குள்ளானவையா என்பதை கண்டறிய அவற்றை பரிசோதனை செய்துகொள்வது அவசியம் என காஞ்சிபுரம் மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் ஹேமேந்திரகுமார் பாண்டே தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: விதை வேளாண்மையில் உள்ள பயிர் விளைச்சல் பெற தரமான விதைகளை உபயோகப்படுத்த வேண்டும். தரமான விதை என்பது நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு குறையாத முளைப்புத் திறன், புறத்தூய்மை, இனத்தூய்மை, நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு மிகாத ஈரப்பதம் இருக்க வேண்டும்.

மேலும், பிற ரக விதைகள் இல்லாதது, பூச்சிநோய் தாக்குதல் இல்லாமல் இருப்பது முக்கியம். எனவே, விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்யும் விதைகள் தரமானவையா என்பதை அறிந்துகொள்வது அவசியம்.

இதையொட்டி, விவசாயிகள் தங்களது விதை மாதிரிகளை உரிய அளவில் எடுத்து, உலர்ந்த துணிப்பையில் போட்டு, அதனுடன் விதை அனுப்புபவரின் பெயர்,

முகவரியைத் தெளிவாக எழுதி வைத்து, நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம் என்ற முகவரியில் சேர்க்க வேண்டும். விதை பரிசோதனைக்கு கட்டணமாக ரூ. 30 வசூலிக்கப்படும் என அதில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## பசுந்தேயிலைக்கு ரூ.15.50 தேயிலை வாரியம் அறிவுரை

கோத்தகிரி : மாவட்டத்தில் உள்ள 'பாட்லீப்' தொழிற்சாலைகளில், கொள்முதல் செய்யப்படும் பசுந்தேயிலை கிலோவுக்கு, 15.50 ரூபாய் சராசரி விலை வழங்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது.

குன்னூர் தேயிலை வாரிய துணை இயக்குனர் ஹரிபிரகாஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

நீலகிரி மாவட்டத்தில் உள்ள, தனியார் தேயிலை தொழிற் சாலைகள் (பாட்லீப்), விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப் படும் பசுந்தேயிலைக்கு, இம்மாதம், 30ம் தேதி வரை, ஒரு கிலோவுக்கு, 15.50 ரூபாய், சராசரி விலை வழங்க வேண்டும்.

தேயிலை வாரிய வளர்ச்சி அலுவலர்கள், தேயிலை தொழிற்சாலை ஆலோசனை ஆலோசகர்கள், துணை இயக்குனர்கள் ஆய்வு செய்து உறுதிப்படுத்த வேண்டும். அனைத்து தனியார் தொழிற்சாலைகளுக்கும், சராசரி விலை வழங்குவது தொடர்பான அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு, ஹரிபிரகாஷ் கூறியுள்ளார்.

## ஒட்டன்சத்திரத்தில் கரும்பு முருங்கை விலை உயர்வு

ஒட்டன்சத்திரம்: ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் கரும்பு முருங்கை கிலோவிற்கு ரூ.5 அதிகரித்து ரூ.37 க்கு விற்றது.

ஒட்டன்சத்திரம், கள்ளிமந்தையம், கப்பலப்பட்டி, காவேரியம்மாபட்டி, அம்பிளிக்கை உள்ளிட்ட கிராமப்பகுதிகளில் முருங்கை அதிகமாக பயிரிடப்படுகிறது.

கடந்த சில நாட்களாக செடி முருங்கை மற்றும் கரும்பு முருங்கையின் விலை வித்தியாசம் ரூ.6 க்குள் இருந்தது. சமீபத்தில் இப்பகுதியில் பெய்த மழை காரணமாக செடி முருங்கையில் இருந்த காய்கள் கருப்பு நிறத்திற்கு மாறின.

இவை நீண்ட நாட்களுக்கு தாக்குப் பிடிக்காது என்பதால் வியாபாரிகள் தரம் வாய்ந்து கரும்பு முருங்கையை அதிகளவு கொள்முதல் செய்தனர். இதனால் கடந்த வெள்ளியன்று ஒரு கிலோ ரூ.32 க்கு விற்ற கரும்பு முருங்கை ரூ.5 அதிகரித்து ரூ.37 க்கு விற்பனையானது.

அதே சமயம் செடிமுருங்கை விலை மாற்றமின்றி ரூ.22க்கும், மரம் முருங்கை ரூ.16க்கும் விற்பனையாகின. இதன் மூலம் கரும்பு முருங்கைக்கும், செடிமுருங்கைக்கும் உள்ள விலை வித்தியாசம்ரூ.15 ஆக உயர்ந்தது.

கமிஷன் கடை உரிமையாளர் ஒருவர் கூறுகையில்,“ மழைக் காலமாக இருப்பதால், முருங்கை செடியில் உள்ள பூக்கள் உதிர்ந்து விளைச்சல் பாதிக்கப்படும் என்பதால், விலை குறைய வாய்ப்பில்லை,” என்றார்.

## மானவாரி விவசாயிகள் மகிழ்ச்சி

வருஷநாடு: கண்டமனூர், அம்பசாமுத்திரம், பொன்னம்மாள்பட்டி,துரைச்சாமிபுரம், அண்ணாநகர், பாலூத்து, முத்தாலாம் பாறை, அருகவெளி, கடமலைக்குண்டு, கோபாலபுரம், தப்புக்குண்டு, காடிச்சேரி ஆகிய பகுதிகளில் ஆகிய பகுதி களில் 4 ஆயிரம் ஏக்கரில் மானவாரி சாகுபடி உள்ளது. சில மாதங்களாக பருவ மழை இன்றி மானவாரி விவசாயிகள் சிரமப்பட்டனர். தற்போது பெய்து வரும் சாரலால் விவசாயிகள் தங்களது மானவாரி நிலங்களை உழவு செய்து, அதில் தட்டான், மொச்சை பயிர், கம்பு, சோளம், உளுந்து உள்ளிட்ட பயிர்களை விதைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

## திருப்பதிக்கு 2 டன் பூக்கள் அனுப்பி வைப்பு

இடைப்பாடி: திருப்பதிக்குகொங்கணாபுரம் பகுதிகளில் இருந்து, இரண்டு டன் பூக்கள், லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. திருப்பதி, திருமலையில் உள்ள ஏழுமலையானுக்கு, இன்று, புஷ்பயாக பூஜை நடக்கிறது. அதற்கு, சேலம், கொங்கணாபுரம், ஸ்ரீமன் நாராயணநித்ய புஷ்ப கைங்கர்ய சபா மூலம், செவ்வந்தி, துளசி, மல்லிகை, ரோஜா, மரிக்கொழுந்து, வாடாமல்லி, சாமந்தி, செவ்வரளி உள்ளிட்ட, 2 டன் பூக்கள், கன்னந்தேரியில் உள்ள முருகன் கோவிலில் இருந்து, நேற்று இரவு, திருமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டன. மேலும், 10 ஆயிரம் பன்னீர் செடிகள், கோழிக்கொண்டை, வெள்ளரளி, கரும்பு, மாங்காய் கொத்து ஆகியவற்றை, கொங்கணாபுரத்தை சேர்ந்த சந்திரசேகர் தலைமையில், சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து, லாரிகள் மூலம் அனுப்பிவைக்கப்பட்டன. சேலம் பகுதிகளை சேர்ந்த, 100க்கும் மேற்பட்ட பெண்கள், கொங்கணாபுரம் வந்து, பூக்களை தொடுத்தனர். பூக்கள், விலை கொடுத்தும், இலவசமாகவும் பெற்றனர். அதை, குருசாமி, சின்னுபூசாரி, பாபு, குப்புசாமி ஆகியோர் சேகரித்து, லாரிகள் மூலம், திருமலைக்கு அனுப்பிவைத்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### காய்கறி நல்லதே கீரை நல்லதே பழம் நல்லதே என்றாலும் பார்த்தே சாப்பிடணும்!



ஆரோக்கியமான வாழ்க்கைக்கு காய்கறிகள், பழங்கள், கீரைகள் சாப்பிட வேண்டும் என்பதை மருத்துவர்கள் மட்டுமல்ல... எத்தனையோ பேர் சொல்லிக் கேள்விப் படுகிறோம். அந்த அளவுக்கு வைட்டமின்கள், தாதுக்கள், நார்ச்சத்துகள், ஆன்டி ஆக்சிடெண்டுகள் என பல சத்துகள் கொட்டிக் கிடக்கின்றன. இதில் நாம் கவனிக்காத இன்னொரு முக்கிய விஷயத்தை சமீபகாலமாக நிபுணர்கள் கூறி வருகிறார்கள்.

காய்கறிகளையும் பழங்களையும் கீரைகளையும் உணவில் சேர்த்துக்கொண்டால் மட்டும் போதாது. அவற்றை முறையாகப் பயன்படுத்த வேண்டும் என்பதும் முக்கியம் என்கிறார்கள். அப்படி என்ன முறையாகப் பயன்படுத்துவது ? ‘காய்கறிகள், பழங்கள், கீரைகளை சுத்தமாகக் கழுவிய பிறகே

பயன்படுத்துகிறோம். அதேபோல, இவற்றை வெட்டிய உடனே பயன்படுத்த வேண்டும் என்பதும் முக்கியம்' என்பதுதான் நிபுணர்கள் சொல்லும் ரகசியம். இதற்கு ஆராய்ச்சியாளர்கள் சொல்லும் காரணம் எல்லோரையும் யோசிக்க வைப்பவை.

'காய்கறிகளை வெட்டி வைத்துவிட்டுத் தாமதமாகப் பயன்படுத்தும்போது பாக்டீரியாக்கள், வைரஸ்கள், சில வகை ஒட்டுண்ணிகள் அவற்றில் உருவாகி விடுகின்றன. குறிப்பாக E.coli, Salmonella, L.Monocytogens போன்ற தீமை செய்யும் நுண்ணுயிரிகள் அதிகமாக உருவாகின்றன. இதனால் நமக்கு நன்மை செய்யும் காய்கறிகள், பழங்களே நமக்குத் தீமை செய்யும் வில்லனாக மாறிவிடுகின்றன. இதையே மருத்துவர்கள் Foodborne diseases என்று சொல்கிறார்கள். குமட்டல், வயிற்றுப் போக்கு, தலைவலி போன்ற பல பிரச்னைகள் இந்த சுகாதாரமற்ற பயன்பாட்டால் ஏற்படுகிறது.

ஆகவே மக்களே காய்கறிகள், பழங்களை வெட்டிய உடனே பயன்படுத்துங்கள். இதையே வேறு மாதிரி சொன்னால் காய்கறிகள், பழங்களை உடனே பயன்படுத்துகிற மாதிரி இருந்தால் மட்டுமே வெட்டுங்கள்'என்கிறார்கள். அதிலும் குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், உடல்நலம் பாதிக்கப்பட்டவர்கள் இந்த விஷயத்தை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்று Food and Agriculture Organization of the United Nations பரிந்துரைத்திருக்கிறது.

இதுபோன்ற 'ரெடி டு ஈட்' என்று உடனடியாக உண்பதற்குக் கடைகளில் கிடைக்கிற உணவுப் பொருட்கள் எல்லாமே பரிசீலனைக்கு உரியவைதான். இதற்கு வெங்காயம் நல்ல உதாரணம். ஓட்டல்களில் சமையல் பயன்பாட்டுக்காக காலையிலேயே கிலோ கணக்கில் வெங்காயத்தை வெட்டி வைத்து விடுகிறார்கள். காலையில் வெட்டி வைக்கப்படுகிற வெங்காயம்தான் இரவு வரை ஆனியன் தோசை, ஆம்லெட்டுகள் என எல்லா உணவு தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது.

எனவே, வெளியிடங்களில் தவிர்க்க முடியாமல் சாப்பிட நேர்கிறபோதும் இதுபோல் வெட்டி வைக்கப்பட்ட சாலட்டுகள், வெட்டி வைக்கப்பட்ட பழங்களிலிருந்து தயார் செய்யப்படுகிற பழரசங்கள் போன்ற உணவு வகைகளைத் தவிர்ப்பதே நல்லது என்கிறார்கள். யோசிக்க வேண்டிய விஷயம்தான்!

## நெல் சாகுபடி விவசாயிகளுக்கு மானியத்தில் விதைகள் விநியோகம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நெல் சாகுபடி விவசாயிகளுக்கு மானிய விலையில் சான்று விதைகள் விநியோகம் செய்யப்படுகிறது. இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சங்கரன் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கெலவரப்பள்ளி அணை, கே.ஆர்.பி அணை, பாரூர் ஆகியவை முழுக்கொள்ளவு நிலையில் உள்ளதால், இரபி பருவத்தில் சுமார் 10 ஆயிரம் எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படும்.

இப்பருவத்திற்கு தேவையான சான்று பெற்ற உயர்ரக நெல் ரகங்கள் ஏடீடி 39 4800 கிலோ, ஜெஜிஎல் 1798 3800 கிலோ, கோ 70,000 கிலோ, கோ51 40,000 கிலோ ஆகியவை இம்மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டா வேளாணமை விரிவாகமையங்களிலும் தயார் நிலையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. நெல் விதைகளை விதை கிராம திட்டம் மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் ஆகியவற்றில் கிலோ ஒன்றிற்கு □10 மானியமாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

மேலும் தற்போது நெல் நடவு கூலி ஆட்கள் பற்றாக்குறை உள்ளதால், நெல் விவசாயத்தை ஊக்குவிக்க மத்திய, மாநில அரசுகள் இணைந்து இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு எக்டேருக்கு □5 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. இம்மான்ய தொகையினை விவசாயிகளின் வங்கி கணக்கில் சேர்க்கப்படுகிறது. மேற்கூறிய ரகங்கள் உயர் விளைச்சல் தரக்கூடியவையாகவும், சன்ன ரகம் குறுகிய வயதுடையவை, பூச்சி தாக்குதல் குறைவாகவும், சாயாத தன்மை கொண்டதாகவும், புகையான் நோய் எதிர்ப்பு தன்மை கொண்டதாவும் உள்ளது.

எனவே, விவசாயிகள் அனைவரும் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி மான்ய விலையில் சான்று பெற்ற நெல் விதைகளை வாங்கி பயன்பெற வேண்டும். மேலும், பிரதான் மந்திரி புதிய பயிர் காப்பீடு திட்டத்தில் நெல் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் ஏக்கருக்கு □367.50 பிரீமியம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் செலுத்தி, அனைத்து நெல் சாகுபடி விவசாயிகளும் இத்திட்டத்தில் பெரும் திரளாக பங்கு கொள்ள வேண்டும். கூடுதல் விவரங்கள் பெறுவதற்கு விவசாயிகள் தங்கள் கிராமங்களுக்கு அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மைய உதவி வேளாண்மை அலுவலர், வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை நேரில் அணுகி பயன்பெறலாம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## அவல்பூந்துறை விற்பனை கூடத்தில் ரூ.1 கோடிக்கு கொப்பரை ஏலம்

மொடக்குறிச்சி, : அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கொப்பரை மற்றும் தேங்காய் ஏலம் நடைபெற்றது. மொடக்குறிச்சி சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் 3,543 மூட்டைகளில் 1 லட்சத்து 76 ஆயிரத்து 008 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில் முதல் தர கொப்பரை கிலோ ரூ.59.45 முதல் 62.70 வரையும் இரண்டாம் தர கொப்பரை கிலோ ரூ.47.20 முதல் 60.85 வரையும் விலை போனது. மொத்தம் ரூ.1 கோடியே 2 லட்சத்துக்கு கொப்பரை விற்பனை ஆனது. அதேபோல 10,245 கிலோ எடையுள்ள 29 ஆயிரத்து 914 தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் அதிகபட்ச விலை டன் ஒன்றுக்கு ரூ.17 ஆயிரத்து 100, குறைந்த விலை டன் ஒன்றுக்கு ரூ.12 ஆயிரத்து 690 என ரூ.1 லட்சத்து 66 ஆயிரத்துக்கு ஏலம் போனது. தேங்காய் ஒன்றுக்கு ரூ.4 முதல் ரூ.9.05 வரை விலை கிடைத்தது.

## விதை பரிசோதனை நிலையத்தில் ஆய்வு

ஊட்டி, : ஊட்டியில் உள்ள விதை பரிசோதனை நிலையத்தில் மாநில விதைச்சான்று மற்றும் விதை ஆய்வு உயர் அதிகாரிகள் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். மாநில விதைச்சான்று இணை இயக்குநர் நடேசன், மாநில விை◌த ஆய்வு ைஇண இயக்குநர் பாண்டியராஜன் ஆகிே◌யார் ஊட்டியில் உள்ள விதை பரிசோதனை நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின் போது, விதை பரிசோதனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட விதைகளின் விவரம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. விதை பரிசோதனை முறைகள், விதைகளின் முளைப்பு திறன் கணக்கெடுப்பு, விதை பரிசோதனை முடிவுகள் ஆகியவை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து அதிகாரிகள் கூறுகையில், விை◌தயின் தரம் என்பது விதையின் முளைப்புத்திறன் மற்றும் புறத்தூய்மை, பிற கலப்பு ஆகியவற்றை பொறுத்ததாகும். தரமுள்ள விதைகளை விதைப்பு செய்வதால் பயிர்களின் எண்ணிக்கை பராமரிக்கப்படுவதுடன் அதிக மகசூலுக்கும் வித்திடுகிறது. எனவே, நீலகிரி மாவட்ட விவசாயிகள் மகசூலில் இழப்பு ஏற்படுவதை தவிர்க்க பயிரிடும் விதைகளின் முளைப்புத்திறன் குறித்து பரிசோதித்து பயிரிட்டு லாபம் அடைய வேண்டும், என்றனர். மேலும், பரிசோதனை நிலையத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனை முறையை மேம்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்தும் அறிவுறுத்தப்பட்டது. ஆய்வின் போது கோவை வேளாண்மை அலுவலர் மற்றும் விதை ஆய்வாளர் உடன் இருந்தனர்.

## 5 ஆண்டுகளுக்கு பின்பெரியநாயகிபுரம் வாய்க்கால் தூர்வாரும் பணி துவக்கம் விவசாயிகள் மகிழ்ச்சி

திருத்துறைப்பூண்டி ; ஐந்து ஆண்டுகளுக்கு பின் பெரியநாயகிபுரம் பாசன வாய்க்கால் தூர்வாரும் பணி துவங்கி உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். திருத்துறைப்பூண்டி பெரியநாயகிபுரம் பாசன வாய்க்கால் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் தூர் வாரப்பட்டது. தற்போது இந்த வாய்க்காலில் செடி, கொடிகள் மண்டி கிடப்பதாலும், தூர் வாராததாலும் பெரியநாயகிபுரம், மங்களநாயகிபுரம், சிங்களாந்தி, கோயில் சிங்களாந்தி பகுதியில் உள்ள 141 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் செல்லாமல் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தனர்.

இதனையடுத்து பெரியநாயகிபுரம் பாசனதாரர் சங்க தலைவர் குமார், செயலாளர் மனோகரன், பொருளாளர் நாடிமுத்து, தமிழ்நாடு விவசாயிகள் சங்க நகர தலைவர் பக்கிரிசாமி உள்ளிட்டோர் கலெக்டர், தாசில்தார் உள்ளிட்டோரை தொடர்ந்து சந்தித்து மனு கொடுத்ததன் அடிப்படையில் வருவாய்துறை மூலம் பெரியநாயகிபுரம் பாசனவாய்க்கால் தூர் வாரும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க நகர தலைவர் பக்கிரிசாமி கூறுகையில், பாசன வாய்க்கால் தூர் வாரி 5 ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் மேட்டூரிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் 4 முறை முள்ளியாற்றிற்கு வந்தும் பாசன வாய்க்காலுக்கு வரவில்லை. இதனால் 4 கிராம விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் சம்பா சாகுபடி கேள்விக்குறியாக உள்ளது. விவசாயிகள் கோரிக்கையை அடுத்து கலெக்டர் நிர்மல்ராஜ் உத்தரவுப்படி வருவாய் துறை மூலம் தூர் வாரும் பணி நடைபெற்று வருகிறது என்றார்.

இதே போன்று பல வருடங்களாக தூர் வாராமல் இருந்த பூசலாங்குடி வடிகால் வாய்க்கால் மற்றும் தூத்தடிமூலை வடிகால் வாய்க்கால் 3.5 கி.மீட்டர் தூரம் தூர் வாரும் பணி ரூ1 லட்சம் மதிப்பீட்டில் வருவாய்துறை மூலமும், திருத்துறைப்பூண்டி நகரப் பகுதியில் உள்ள மீனாட்சி வாய்க்கால் 2 கி.மீட்டர் தூரம் ரூ2 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை மூலமும் தூர் வாரும் பணி முடிந்துள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

## மாதூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் மாற்றுப்பயிர் சாகுபடி அமைச்சர் நேரில் ஆய்வு

காரைக்கால் : காரைக்கால் மாதூர் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், கரும்பு உள்ளிட்ட மாற்றுப்பயிர் சாகுபடி செய்யப்படும் பண்ணையை, அமைச்சர் கமலக்கண்ணன் ஆய்வு செய்தார். புதுச்சேரி வேளாண்துறை சார்பில், காரைக்கால் மாதூர் கிராமத்தில் வேளாண் அறிவியல் நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு மாற்றுப்பயிர் சாகுபடியாக, கரும்பு, காய்கறி மற்றும் கோழி, மீன், முயல் வளர்ப்பு நடைபெற்று வருகிறது.

அண்மையில் காரைக்கால் மாவட்ட விவசாயிகள் நெல் சாகுபடியைத்தொடர்ந்து, மாற்றுப் பயிர் சாகுபடிக்கு மாற வேண்டும் என, வேளாண் அமைச்சர் கமலக்கண்ணன் அறிவித்திருந்தார். இந்த மாற்றுப்பயிர் திட்டத்திற்கு, காரைக்கால் மாதூர் வேளாண் அறிவியல் நிலையம் எவ்வாறு உதவுகிறது என்பதை நேற்று முன்தினம் அவர் ஆய்வு செய்தார். நிலையத்தில், ஆலை கரும்பு, பொங்கல் கரும்பு, கேழ்வரகு, மஞ்சள் மற்றும் காய்கறி சாகுபடியை, நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் அமைச்சருக்கு நேரடியாக அழைத்துசென்று காட்டினார்.

பின்னர், நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளை இதுபோன்ற மாற்றுப்பயிர் சாகுபடிகளை நேரடியாக காட்டி அவர்களை மாற்றுப்பயிர் சாகுபடிக்கு மாற ஊக்குவிக்கவேண்டும் என நிலைய ஒருங்கிணைப்பாளர் மற்றும் அதிகாரிகளுக்கு அமைச்சர் வலியுறுத்தினார்.

## ரூ.1 கோடிக்கு கொப்பரை ஏலம்

மொடக்குறிச்சி, : அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கொப்பரை ஏலம் நடைபெற்றது. விவசாயிகள் 3,543 மூட்டைகளில் 1 லட்சத்து 76 ஆயிரத்து 8 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் முதல் தர கொப்பரை கிலோ ரூ.59.45 முதல் 62.70 வரையும் இரண்டாம் தரம் கிலோ ரூ.47.20 முதல் 60.85 வரையும் விலை போனது. மொத்தம் ரூ.1 கோடியே 2 லட்சத்துக்கு விற்பனை ஆனது. அதேபோல 29 ஆயிரத்து 914 தேங்காய்கள் கொண்டு வந்திருந்தனர். இதில் அதிகபட்ச விலை டன் ஒன்றுக்கு ரூ.17 ஆயிரத்து 100, குறைந்த விலை டன் ஒன்றுக்கு ரூ.12 ஆயிரத்து 690 என ரூ.1 லட்சத்து 66 ஆயிரத்துக்கு ஏலம் போனது.

## திருப்புவனத்தில் மழை பொய்த்தாலும் பாசனம் தொடர்கிறது

திருப்புவனம், : திருப்புவனம் பகுதியில் போதிய மழை இல்லை. தென்மேற்கு பருவகாற்றால் பெய்யும் மழையும் பொய்த்து போனது. வடகிழக்கு பருவமழையும் எதிர்பார்த்த மழையை தரவில்லை. ஆனால் திருப்புவனம் பகுதி விவசாயிகள் மழை பொழியும் என்ற நம்பிக்கையில் மோட்டார் பம்ப் செட் மூலம் கிடைக்கும் தண்ணீரை வைத்து உழவுப்பணி, நாற்றுப்பறிக்கும் பணி, நடவுப்பணியில் முழுவீச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

## மானிய திட்டம் குறித்த பயிற்சி கூட்டம்

சிவகாசி, : சிவகாசி தாலுகா வெள்ளூர் கிராமத்தில், விரிவாக்க சீரமைப்பு திட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய திட்டங்கள் குறித்த பயிற்சி கூட்டம் நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் வனஜா தலைமை வகித்தார். துணை வேளாண்மை அலுவலர் நாராயணன், 'வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். விதை சான்று உதவி இயக்குனர் ராமமூர்த்தி சிறுதானியங்களில் விதை ரக தேர்வு, சான்று நிலை விதை நேர்த்தி, விதைப்பு முறை மற்றும் களை நிர்வாகம் குறித்து பேசினார்.

விதை அலுவலர் முத்துக்குமாரசாமி பயிர் ரகங்களின் புறத்தோற்ற குணாதிசியம், கலப்பினச் செடிகளை அகற்றுதல், பயிர் எண்ணிக்கை பராமரித்தல் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை பற்றி விளக்கினார். இதற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் கனகா மற்றும் உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் அருண்குமார், வனிதா ஆகியோர் செய்திருந்தனர்.

## கூட்டுறவு குடோன்களில் 2,400 டன் டிஏபி உரம் இருப்பு விவசாயிகள் மானிய விலையில் பெறலாம்

சிவகாசி, : விருதுநகர் மாவட்ட கூட்டுறவு விற்பனை இணைய குடோன்களில் 2 ஆயிரத்து 400 டன் டிஏபி உரம் இருப்பில் உள்ளதாக வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.விருதுநகர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது. திருவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, ராஜபாளையம் பகுதிகளில் கிணற்றுப் பாசனம் மற்றும் மானாவாரியாக நெல், கரும்பு பயிரிட்டுள்ளன.

கடந்த சில மாதங்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால் கிணறுகளில் நீர்மட்டம் குறைந்தது. தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கியதால் விவசாயப் பணிகள் தீவிரமடைந்துள்ளன. இதனால், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் அரசு மானிய விலையில் விவசாயிகளுக்கு உரங்கள் விற்பனை செய்து வருகிறது. டிஏபி உர மூடை ரூ.486, காம்ப்ளக்ஸ் உரம் ரூ.327, பொட்டாஷ் ரூ.231, யூரியா ரூ.250 என விற்பனை செய்யப்படுகிறது.

விவசாய பயிர்களுக்கு மேல் உரமாக டிஏபி பயன்படுத்தப்படுகிறது. தற்போது கூட்டுறவு விற்பனை இணைய குடோன்களில் 2 ஆயிரத்து 400 டன் டிஏபி உரம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதேபோல மேல் உரமாக தெளிக்கப்படும் காம்ப்ளக்ஸ், அடிஉரங்களான பொட்டாஷ், யூரியா உரங்களும் போதிய அளவில் இருப்பு உள்ளது. இந்த உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## தேவை அதிகம் - வரத்து குறைவு குளச்சலில் சிப்பி மீன் சீசன் தொடக்கம்

குளச்சல் : குளச்சலில் சிப்பி மீன் சீசன் தொடங்கியுள்ளது. அதேவேளை தேவைக்கு குறைவாக மீன்கள் கிடைப்பதால் மீனவர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். குமரி மாவட்ட கடல் பகுதிகளில் கணவாய், இறால், கேரை, சுறா, நெத்திலி, சாளை, கொழிச்சாளை, நெய்மீன், வேளமீன், செம்மீன், நாக்கண்டம் ஆகிய மீன் வகைகளுக்கு அடுத்தப்படியாக சிப்பி மீன்களும் அதிக அளவில் கிடைக்கின்றன. மீன் பிரியர்கள் இதனை அதிகமாக விரும்புகின்றனர். சிப்பி மீன்கள் குளச்சல், கடியப்பட்டணம், வாணியக்குடி, கோடிமுனை, குறும்பனை, இனயம் ஆகிய கடல் பகுதிகளில் தான் அதிக அளவில் கிடைக்கின்றன.

ஆண்டுதோறும் நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய 3 மாதங்கள் மட்டும் சிப்பி மீன்கள் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த சில வருடங்களாக சிப்பி மீன்களுக்கு கேரளாவில் நல்ல வரவேற்பு உள்ளது. இந்த மீன்களை கேரள மதுபான பார்களில் மது பிரியர்கள் அதிகம் விரும்புவதால் தேவை அதிகரித்துள்ளது. இதனால் கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

எனவே கேரள வியாபாரிகள் சிப்பி மீன்கள் எடுக்கும் கடல் பகுதியில் நவம்பர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை முகாமிட்டு மொத்தமாக வாங்கி செல்கின்றனர். தற்போது நவம்பர் மாதம் தொடங்கிய நிலையில் சிப்பி மீன் எடுக்கும் மீனவர்கள் குளச்சல் கடல் பகுதிக்கு கடந்த 3 நாட்களாக அதிக அளவில் வந்து செல்கின்றனர். ஆனால் மீனவர்கள் குறைந்த அளவு சிப்பிகளுடனேயே கரை திரும்புகின்றனர்.

நேற்று தொழிலாளர்கள் தலா ஒரு கச்சா சிப்பியுடனேயே கரை திரும்பினர். இவற்றை கோணி பை (சாக்கு) அளவில் அளந்து வியாபாரிகள் வாங்கி சென்றனர். ஒரு கோணி பை சிப்பி □3500 வரை விலை போனது. குளச்சலில் சிப்பி மீன் சீசன் தொடங்கியுள்ள நிலையிலும், குறைவான அளவே மீன்கள் கிடைப்பதால் மீனவர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

முக கவசம் அணிந்து...

சிப்பி மீன் பிற மீன்களை போல் வலை, தூண்டில் பயன்படுத்தி பிடிக்கப்படுவதில்லை. அனைத்து மீனவர்களும் சிப்பி எடுப்பதில் ஆர்வம் காட்டுவதும் இல்லை. இவை கடல் பாறையின் அடிப்பகுதியில் ஒட்டியிருக்கும். மூச்சு பயிற்சி பெற்ற மீனவர்கள் முக கவசம் அணிந்து சென்று புல் செதுக்கி போன்ற உபகரணத்தால் பாறையில் ஒட்டியிருக்கும் சிப்பியை தனியாக பெயர்த்து எடுத்து வருகின்றனர். இது ஆபத்து நிறைந்தது. இதனால் முத்து குளிக்கும் மீனவர்களே பெரும்பாலும் இத்தொழிலில் ஈடுபடுகின்றனர்.